# வானவில்

VAANAVIL
ISSUE – 17 MAY 2012

இதழ் - 17 வைகாசி 2012


# தமிழக அரசியல்வாதிகளே! இலங்கைத் தமிழர்கள் வாழ்வுடன் விளையாடுவதை நிறுத்துங்கள்!!



தமிழ்நாட்டின் இனவாத அரசியல்வாதிகள், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்துவது கடந்த பல தசாப்தங்களாக நடந்து வருகின்ற ஒரு விடயமாக இருக்கின்ற போதிலும், தற்போது அது மேலும் மேலும் மோசமான ஒரு நிலையை எடுத்து வருகின்றது. அவர்களுடைய வாய்ச்சவடால்களும், நடவடிக்கைகளும் உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் மீது அப்பழுக்கில்லாத அக்கறையைக் கொண்டிருக்குமாயின், நாம் அதை இருகரம் நீட்டி வரவேற்கலாம்.

ஆனால் அப்படியில்லாமல் தமக்கிடையிலான அரசியல் போட்டி காரணமாவும், தமிழ்நாட்டு மக்களின் எரியும் பிரச்சினைகளிலிருந்து அம்மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும், அங்குள்ள பிரதான அரசியல் கட்சிகள் செய்யும் அமர்க்களங்கள், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் வளர்க்கவே செய்யும் என்பதை, கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் இந்த ‘இனமானம் காக்கும்’ அரசியல்வாதிகளுக்கு நாம் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை.

கடந்த காலங்களில் வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், எஸ்.இராமதாஸ், தொல்.திருமாவளவன், சுப.வீரபாண்டியன், கொளத்தூர் மணி போன்ற சில்லறை அரசியல்வாதிகளே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை வைத்து தமது அரசியல் பிழைப்புகளை நடாத்தி வந்தனர். அவர்களது ‘பெட்டிக்கடை’ வியாபாரத்துக்கு தமிழக மக்களின் ஆதரவு இல்லாது இருந்த போதிலும், தமக்கு ஒரு பிரச்சார பலத்தைத் தேடுவதற்காக புலிகளின் புலம்பெயர் அமைப்புகள் அவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபா பணத்தை வாரி வழங்கிவந்தன. அவர்களது காட்டில் புலிகளின் பண மழை பொழிவதைக்கண்ட, தம்மை இடதுசாரிகள் என்று சொல்லிக் கொண்ட சிலரும் நாக்கில் ஜலம் ஊற வாலை ஆட்டத் தொடங்கினர்.

அதன் காரணமாக, தாம்தான் உண்மையான மார்க்சிச – லெனினிசவாதிகள் என்று தம்மைத்தாமே அழைத்துக்கொண்ட பல்வேறு ‘நக்சல்’ குழுக்கள் முதல், போலி இடதுசாரிகளான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் து.ராஜா, தா.பாண்டியன் வரை, எல்லாப் பிழைப்புவாதிகளும் தாம் பேசி வந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவத்தை ஒரு பக்கம் மூட்டைகட்டி வைத்துவிட்டு, சிங்கள இனத்துக்கு விரோதமான கடைந்தெடுத்த இனவாதிகளாகவும், புலிகளின் தீவிர ஆதரவாளர்களாக மாறினர். அவர்கள் எவ்வளவு தூரம் சந்தர்ப்பவாத அரசியல் சகதியில் புரள்கிறார்கள் என்றால், தமிழகத்துக்கு விஜயம் செய்யும் இலங்கை அரசின் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு மட்டுமின்றி, சாதாரண கருத்தரங்குகளில் கலந்து கொள்ளச் செல்லும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்குக்கூட இந்த ‘உத்தம சோசலிசவாதிகளே’ கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கும் அளவுக்கு அவர்களது சிவப்புச் சாயம் வெளுத்துக் கிடக்கிறது.

ஆனால் அவர்களது துரதிஸ்ட்டம், அவர்கள் இந்த தமிழ் தேசிய பிழைப்புவாத வண்டியில் ஏறிய நேரம் புலிகளின் அழிவும் ஆரம்பமாகிவிட்டதால்,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# துயரமும் வெற்றியும் நிறைந்த முள்ளிவாய்க்கால்

2009 ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூருதல் என்ற பெயரில் இலங்கையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிரமுகர்களும், புலம்பெயர் நாடுகளில் புலி ஆதரவாளர்களும், தமிழ்நாட்டில் புலி ஆதரவு அரசியல்வாதிகளும் வழமைபோல அஞ்சலிக் கூட்டங்களை நடாத்தியுள்ளனர். அதுபோலவே தற்போதைய இலங்கை அரசாங்கமும் யுத்தத்தில் புலிகளை வெற்றி கொண்டதை, கொழும்பில் இராணுவ அணிவகுப்புகளுடன் பெரும் எடுப்பில் கொண்டாடியுள்ளது. கொல்லப்பட்ட மக்களை வைத்து சொந்த அரசியல் இலாபம் தேடும் ஒரு பகுதியினரும், கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியிருக்கும் அந்த மக்களின் துயர்துடைப்பதை விடுத்து இராணுவ வெற்றி கொண்டாடுபவர்களாக மறுபகுதியினரும் இருக்கின்றனர்.

புலம்பெயர் நாட்டு புலி ஆதரவாளர்கள் வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அவுஸ்திரேலியாவிலும் 'குட்டிக்குட்டித்' தலைமைகளைக் கொண்டு பல குழுக்களாக சிதறிச் சின்னாபட்டிருப்பது தெரிந்ததே. இந்த புலம்பெயர் நாட்டு புலி ஆதரவுக்குழுக்கள் தனித்தனியாக ஒழுங்குசெய்த அஞ்சலிக் கூட்டங்களில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு மாத்திரமன்றி, கொல்லப்பட்ட புலிகளுக்கும் வீரவணக்கம் செலுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் இந்த மூன்றாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளில், குறிப்பாக புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அஞ்சலி செய்யப்பட்டதாக எந்த செய்தியுமே வரவில்லை. தேசியத்தலைவன், சூரியதேவன், எவருக்கும் ஈடிணையற்றவன் என எப்படியெல்லாம் தமிழில் வருணிக்கலாமோ அவ்வாறெல்லாம் வருணிக்கப்பட்ட ஒருவனின் மரணத்தை மூன்று ஆண்டுகளின் பின்னரும் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள திராணியற்றவர்கள் எதற்காக இந்தமாதிரியான நினைவு நிகழ்வுகளை வருடாவருடம் ஒழுங்கு செய்கிறார்கள்?

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், இலங்கை பாதுகாப்பு படையினர் இரண்டு தடவைகள் (1971, 1989 ஆண்டுகளில்) தென்னிலங்கையை பிரதான களமாக கொண்டிருந்த ஜனதா விமுக்தி பெரமுனவின் ஆயுதக்கிளர்ச்சியை வெற்றிகரமாக அடக்கியுள்ளனர். ஆனால் இலங்கை பாதுகாப்பு படையினர் ஒருபோதுமே அதனை ஒரு வெற்றியாக கொண்டாடியதில்லை. புலிகள் தலைமையிலான இராணுவ அமைப்பு ஏறத்தாழ 14 வருட காலம் தொடர்ச்சியாக இலங்கையின் ஒருபகுதி நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து, அப்பகுதி மக்களின் மீது பாசிச கொடுங்கோல் ஆட்சியை நிறுவியதோடு, கொழும்பு உட்பட இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் வலிந்த கொலைவெறித் தாக்குதல்களை விஸ்தரித்தது. ஆனால் ஜனதா விமுக்தி பெரமுனவின் இராணுவ அமைப்பு அப்படியான பயங்கரத்தைக் கொண்டிருந்ததல்ல. எனவே புலிகள் மீதான இராணுவ வெற்றியை ஒரு தேசிய வெற்றி விழாவாக கொண்டாடுவதற்கு இலங்கை பாதுகாப்பு படையினருக்கு நியாயமான காரணங்கள் உண்டு. எனினும் தற்போதைய இலங்கையின் ஆளுங்கட்சியினர், இவ்வெற்றிக் கொண்டாட்டங்களில் அரசியல் இலாபங்களையும் ஈட்டுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த அனர்த்தத்திற்கு முழுக்கமுழுக்க புலிகளே காரணம் என்பதை ஏற்கமறுத்து, இலங்கை அரசு மீது குற்றம் சுமத்துபவர்கள் வெறும் இலங்கை அரசு எதிர்ப்பாளர்களே. வன்னி மாவட்டத்தில் ஒவ்வொரு இடத்திலும் புலிகள் தோற்று, தமது கட்டுப்பாட்டு நிலப்பரப்பு குறுகிக்கொண்டு வருகையில், தோற்றுப்போன பிரதேசங்களில் இருந்த மக்களையும் துப்பாக்கி முனையில் எஞ்சியிருந்த குறுகிய நிலப்பரப்புக்குள் புலிகள் தம்முடனே 'அழைத்து' (விரட்டி) சென்றனர். இலட்சக்கணக்கான பொதுமக்களை தம்மை சுற்றி நிற்க வைத்தால், இலட்சக்கணக்கான பொதுமக்களின் அழிவின் பின்னரே தமது அழிவு நிகழுமென புலிகள் நம்பினர். இவ்வாறு வன்னி மக்களை மனிதக்கேடயமாக பயன்படுத்துவதற்கு எதிராக, மூன்று வருடங்களுக்கு முன்னர் தமிழர் தரப்பிலிருந்து ஒரு சில குரல்களே ஒலித்தன. இன்று முள்ளிவாய்க்கால் பற்றி பேசுபவர்கள், அன்று புலிகளின் மனிதக்கேடயம் பற்றி பேசாதவர்களே.

யூலை மாதத்தில் இனக்கலவர நினைவு தினம், நவம்பர் மாதத்தில் மாவீரர் நினைவு தினம் என இரண்டு தினங்களை கொண்டாடிக் கொண்டிருந்தவர்களுக்கு, இப்போது மே மாதத்திலும் கொண்டாட்ட தினமொன்று கிடைத்துள்ளது. எனினும் இத்தினங்களுக்கு, 2009 ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் இருந்தவாறான மக்களின் ஆதரவு இப்போது இருப்பதில்லை.
*

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# பிரான்சின் புதிய ஜனாதிபதி பிரச்சினைகளைத் தீர்ப்பாரா?

ஐரோப்பாவின் முக்கிய நாடுகளில் ஒன்றும், கடந்த நூற்றாண்டுகளில் பல புரட்சிகளைக் கண்டதுமான பிரான்சில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய வலதுசாரிப் போக்குள்ள ஜனாதிபதி நிக்கோலஸ் சாக்கோசி (Nicolas Sarkozy) யைத் தோற்கடித்து, சோசலிசக் கட்சியின் வேட்பாளர் ஃபிரான்கோயிஸ் ஹொல்லண்டே (Francois Hollande) வெற்றிவாகை சூடியுள்ளார். அதன் மூலம் 17 வருடங்களுக்குப் பின்னர் சோசலிசக் கட்சியின் ஜனாதிபதி ஒருவர் அங்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ளார். வெற்றி பெற்றுள்ள ஹொலண்டே ஒரு பிரபலமான தொழில்முறை அரசியல்வாதியாவார். ஐரோப்பிய வலய நாடுகளில் (Euro Zone) பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர், ஆட்சி மாற்றம் ஏற்படும் 11வது நாடு பிரான்ஸ் ஆகும்.

மொத்த சனத்தொகையில் மிகவும் அதிகமான மக்கள் - அதாவது 81 சதவீதம் மக்கள் இத்தேர்தலில் வாக்களித்திருந்தனர். அதில் ஹொல்லண்டே 51.64 வீதத்தையும், சாக்கோசி 48.36 வீதத்தையும் பெற்றிருந்தனர். அதேவேளையில் முதற்சுற்று தேர்தலில் தீவிர வலதுசாரி வேட்பாளரான மறைன் லி பென் (Marine Le Pen) 17.9 வீத வாக்குகளையும், மத்திய பாதையாளரான ஃபிரான்கோயிஸ் பேரோ (Francois Bayrou) 9.1 வாக்குகளையும் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 17 வருடங்களின் பின்னர் சோசலிசக் கட்சி வேட்பாளர் பெற்ற இந்த வெற்றி, இலங்கையில் 17 வருடங்கள் நடைபெற்ற வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து, 1994ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பெற்ற வெற்றி போன்றது என, பிரான்சில் வாழும் இலங்கையைச் சேர்ந்த மூத்த தமிழ் இடதுசாரி ஒருவர் 'வானவில்'லிடம் தெரிவித்தார்.

சாக்கோசியின் தோல்விக்குப் பல காரணங்கள் சொல்லப்பட்ட போதும், பிரதானமாக அவரது தீவிரமான அமெரிக்க சார்பு நிலைப்பாடு, கடுமையான பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைகள், வர்த்தகப் பற்றாக்குறை, குடியேற்றவாசிகள் மீதான கெடுபிடிகள், இஸ்லாமியர்களின் சமய – கலாச்சார வழக்கங்கள் மீதான கடும் கட்டுப்பாடுகள், அவரது தனிப்பட்ட கடுமையான குணாம்சம் என்பன பிரதான காரணங்களாகப் பார்க்கப்படுகின்றன. 1970 களில் ஜெனரல் டி கோலின் ஆட்சியை விரட்டியடித்ததிற்குக் காரணமாக இருந்தது போன்ற, தொழிலாளர்கள் - மாணவர்கள் - கறுப்பின மக்களின் கிளர்ச்சிகள் சாக்கோசியின் 5 வருட ஆட்சியிலும் அடிக்கடி நடந்து வந்துள்ளன.



இந்தத் தேர்தல் முடிவு பற்றி நோபல் பரிசுபெற்ற பொருளியலாளரான போல் குறூக்மன் (Paul Krugman) நியூயோர்க்கில் வைத்து ரொய்ட்டேர்ஸ் தொலைக்கட்சியிடம் கருத்துக் கூறுகையில், 'தோல்வியடைந்த கொள்கைகள் மீதான அதிருப்தியை இந்த முடிவு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது' என்று கூறியுள்ளார்.

தற்போது பதவியை ஏற்றுள்ள புதிய ஜனாதிபதி ஹொல்லண்டே, பிரான்ஸ் எதிர்நோக்கும் ஆழமான பொருளாதார, சமூக நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணவென, பல திட்டங்களை அறிவித்துள்ள போதிலும், எவ்வளவு தூரம் அவரால் அவற்றை நிறைவேற்ற முடியும் என்று சொல்லிவிட முடியாது. பிரான்சில் தற்போதைய வேலையில்லாத் திண்டாட்டம் 10 வீதமாக இருக்கின்றது. அதன் கடன் சுமையும் அதிகமாக இருக்கின்றது. இவற்றுக்குத் தனியாக பிரான்சினால் தீர்வு கண்டுவிட முடியாது. ஏனெனில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடான பிரான்சின் அரசியல் பொருளாதார அமைப்பு முறை, மேற்கத்தைய ஏகாதிபத்திய முதலாளித்துவ முறைமையுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்ததாகும். எனவே ஏதாவதொரு மேற்கு நாட்டில் பனிப்புயல் வீசினால், பிரான்சுக்கும் சளி கட்டுவது தவிர்க்க முடியாதது.

இன்று மேற்கு முதலாளித்துவம் எதிர்நோக்கி வருகின்ற ஆழமான நெருக்கடியிலிருந்து, பிரான்சை மட்டும் ஒரு சோசலிசக் கட்சி ஜனாதிபதியினால் மீட்டெடுத்துவிட முடியும் எனக் கருதுவது வெறும் கற்பனாவாதமாகும். அத்துடன் தற்போதைய புதிய ஜனாதிபதியின் கட்சிப் பெயரில்தான் சோசலிசம் என்ற சொல் இருக்கிறதே தவிர, அதுவும் ஒரு முதலாளித்துவக் கட்சிதான். எனவே பிரான்சின் இரண்டு கட்சிகளினதும் நடவடிக்கைகளில் பெரிய வித்தியாசங்கள் எதையும் கண்டுவிட முடியாது. வலதுசாரி ஜனாதிபதி புண்ணுக்கு மேல் எரிதிரவத்தை

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க.....

# ஜெனிவா தீர்மானம் தமிழர்களுக்கு நன்மை பயப்பதற்கானது அல்ல!

## *புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறுகிறார்!!*

''ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், அதனைத் தொடர்ந்து வரக்கூடிய விடயங்கள் எல்லாமுமே தமிழர்களுக்கு அல்லது அவர்களது இறைமையை மீட்டுக் கொடுக்கும் விடயங்கள் அல்ல. அவை இந்தப் பிராந்தியத்திலே வல்லரசுகளுக்கிடையிலே நடைபெறும் போட்டியின் விளைவுகளே. அதாவது இந்தப் பிராந்தியத்திலே சீனா ஆதிக்கம் செலுத்திவிடக்கூடாது என்பதற்காக, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளே இவை. தமது நலன்சார்ந்து அவை இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன''.

இவ்வாறு கூறியிருக்கிறார் புளொட் இயக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்! வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

''தமிழ்த் தேசியப் போராட்டம் காரணமாக தமிழ் விவசாயிகள் கடற்தொழிலாளர்கள் இன்னமும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான விடிவு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்விலேயே தங்கியுள்ளது. நாம் நிரந்தர அரசியல் தீர்வுக்காக கடந்த ஆறு தசாப்தங்களாக அகிம்சை வழியிலும் ஆயுதம்தாங்கிய வழியிலும் போராடி வந்தோம். ஆனால் எந்தவொரு போராட்டமும் சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை. நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு கிடைக்கும் வரை சுதந்திரமான ஒரு தொழிலாளி வர்க்கம் இருக்க முடியாது.

இன்று அந்த நிலைமைகள் மாற்றமடைந்து சர்வதேசம் தமிழர்கள் மீது ஒரு பார்வையைச் செலுத்தும் நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது. ஆனால் நாம் ஒரு விடயத்தை மறந்துவிடக்கூடாது. ஜெனீவா தீர்மானம் தமிழர்களுடைய நன்மைக்கானது என நாம் எண்ணிவிடக்கூடாது. அவர்கள் எமது நன்மைக்காகத்தான் பேசுகிறார்கள் என்று நம்பி, எமது மக்களை மேலும் படுகுழியினுள் தள்ளிவிடக்கூடாது. அவர்கள் தமது நன்மைக்காகச் செய்தாலும், அதில் எமது மக்களுக்கு நன்மையானது ஏதாவது இருக்கிறதா என்பதை நன்கு ஆராய்ந்து செயல்பட வேண்டியது இங்குள்ள தலைவர்களின் கடமையாகும்'' என்று கூறினார்.

**தகவல்: ஏ.எம்.பரசுராமன் – வவுனியா**

---

இதுவரையில் அழிந்தொழிந்த புரட்சிக்காரர் கட்சிகளெல்லாம் ஏன் அழிந்து போயின என்றால், அவை போதையில் மதிமயங்க ஆரம்பித்தன; தம்மைத்தாமே ஏமாற்றிக்கொண்டு வந்தன; நம்முடைய பலம் எதிலிருக்கிறது என்பதை பார்க்கத் தவறின; தம்முடைய பலவீனத்தைப் பற்றி பேசுவதற்கு பயந்தன.

**- லெனின்**

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி வழங்குங்கள்!

இலங்கைச் சிறைகளில் பல நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் பல்லாண்டுகளாக விசாரணைகள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் கூட தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் கைதிகள் தம்மீதான குற்றச்சாட்டுகளை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தி, தாம் குற்றம் இழைத்தது நிரூபணமானால் தண்டனை வழங்கும்படியும், இல்லாது விட்டால் தம்மை விடுதலை செய்யுமாறும் பல வருடங்களாகக் கோரி வருகின்றனர்.

இவர்களது கோரிக்கைகள் இன்றுவரை கவனத்துக்கு எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களையும் கூட நடாத்திப் பார்த்தனர். அப்படியான வேளைகளில் சில பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அரசியல்வாதிகளோ அவர்களைச் சென்று பார்த்து சில வாக்குறுதிகளை வழங்கி வருவதும், பின்னர் அது ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பது போல ஆகிப்போவதும் வழக்கமாகிவிட்டது.

இந்த சந்தேக நபர்களில் பலர் கடந்த காலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளில், குறிப்பாக புலிகளின் செயற்பாடுகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பிரகாரமும், இலங்கைச் சட்டங்களின் அடிப்படையிலும், மனச்சாட்சியின் அடிப்படையிலும் இவர்களுக்கான நீதி வழங்கப்படுவது அவசியம். அவர்கள் குற்றமிழைத்திருந்தால், நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தி விசாரணை செய்து, அவர்களுக்குரிய தண்டனையை சட்டப்படி வழங்கலாம். அதைவிடுத்து நிச்சயமற்ற எதிர்காலத்துடன் அவர்களை வைத்திருப்பது, புலிகள் தமது பகுதிகளில் நடாத்திய காட்டுத் தர்பார் நீதி போல ஆகிவிடும்.

இலங்கையில் புலிகளுடான இறுதிப்போர் நடைபெற்ற காலத்தில் சரணடைந்த பல்லாயிரக்கணக்கான புலி உறுப்பினர்களை, அரசாங்கம் புனர்வாழ்வளித்த பின்னர் மூன்றாண்டு காலத்துக்குள் விடுதலை செய்து வருகின்றது. அவர்கள் எல்லோருமே களத்தில் நின்று அரச படைகளுடன் போரிட்டவர்கள். அப்படியானவர்களுக்கே ஒரு மனிதாபிமான வழிமுறையைக் கையாளும் அரசு, சிறையில் பல்லாண்டுகளாக வாடும் தமிழ் அரசியல் கைதிகளை மட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடாத்துவது முறையன்று. அவர்களுக்கும் உரிய நீதியை வழங்குவது அவசியம்.

இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்ட விரும்பும் அனைத்து அரசியல் சக்திகளும், பொது அமைப்புகளும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியமாகும். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணத் தவறின், சிறையில் பல்லாண்டுகளாக இருப்பவர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடிய அபாயமுண்டு.

**வி.கணபதிப்பிள்ளை – களுவாஞ்சிக்குடி**

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர தினமான மேதினத்தை, இலங்கையின் படுபிற்போக்கானதும் முதலாளித்துவ கொள்கைகளைக் கொண்டதுமான ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணத்தில் 'கொண்டாடியதன்' மூலம், அத்தினத்தின் புனிதத்துவத்தைக் களங்கம் செய்துள்ளன.




அதிலும் ஐ.தே.க பொறுத்தவரை, மேதினத்தை நினைவுகூர்வதற்கு அது எந்தவித தார்மீக உரிமையும் கிடையாத ஒரு கட்சியாகும். ஏகாதிபத்தியத்தினதும், இலங்கையின் தரகு முதலாளிகளினதும் பிரதிநிதியான அக்கட்சி, 1947 தேர்தல் மூலம் சுதந்திர இலங்கையின்

# யாழ்ப்பாணத்தில் ஐ.தே.க – தமிழ் கூட்டமைப்பு மேதின தமாசாவும், புரட்சிகர மேதின பாரம்பரியமும்!

முதலாவது ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர், 1956 ஆண்டுவரை இலங்கையில் தொழிலாளர்கள் மேதினத்தை நினைவுகூர்வதற்கு, அத்தினத்தை விடுமுறை தினமாக்க பிடிவாதமாக மறுத்து வந்த கட்சியாகும். 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்த பின்னரே, இலங்கையில் மேதினம் விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

அதன்பின்னர்தான், தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றுவதற்காக, அதன் உரிமைப் போராட்டத்தை எடுத்தியம்பும் சிவப்புக் கொடியை நிராகரித்துவிட்டு, தனது பச்சைக் கொடியுடன் ஐ.தே.கவும் மேதினத்தை கொண்டாடத் தொடங்கியது. ஆனாலும் தொடர்ந்தும் முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கும் கட்சியாகவே இன்றுவரை செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, 1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்ததும் மேதினத்தின் புரட்சிகரத் தன்மையை மழுங்கடிப்பதற்காக மீண்டும் பல சூழ்ச்சிகளில் இறங்கியது.

ஜே.ஆர். அரசாங்கம், தொழிலாளர்கள் இடதுசாரிக் கட்சிகள் நடாத்தும் மேதின ஊர்வலங்களிலும், கூட்டங்களிலும் பங்குபற்றுவதைத் தடுப்பதற்காக, மேதினத்தன்று இலங்கையிலுள்ள எல்லாப் பட மாளிகைகளிலும் அன்றைய தினம் எவரும் கட்டணம் செலுத்தாது சென்று சினிமா பார்க்கலாம் என்றதொரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. அத்துடன், அன்றைய தினம் அரச செலவில் வட இந்தியாவிலிருந்து இந்தி சினிமா நட்சத்திரங்களையும், பாடகர்களையும் கொண்டு வந்து கொழும்பு காலிமுகத்திடலில் தமாசாக்களையும் நடாத்தியது. இருந்தும் வழமையாக புரட்சிகர மேதின நிகழ்வுகளில் பங்குபற்றும் தொழிலாளர்களையோ மக்களையோ ஐ.தே.க அரசால் திசைதிருப்ப முடியவில்லை. அதனால் காலப்போக்கில் அதைக்கைவிட வேண்டிய நிலைக்கு ஐ.தே.க அரசு தள்ளப்பட்டது.

மறுபக்கத்தில், ஐ.தே.கவைப் போலவே தமிழ் மக்களின் பிரதான கட்சிகளாக வந்த தமிழ் காங்கிரஸ் - தமிழரசு கட்சிகளும் முதலாளிகளின் நலன்களுக்காகவும், வடக்கின் நிலப்பிரபுத்துவ சாதி வெறி பிடித்த வேளாள மேட்டுக்குழாமினரின் பிரதிநிதிகளாகவும் இருந்தனரேயொழிய, ஒருபோதும் உழைக்கும் மக்களுக்காகச் செயல்படவில்லை. அக்கட்சிகளும் முன்னர் மேதினத்தை ஒருபோதும் நினைவுகூரும் செயல்பாடுகளில் ஈடுபட்டது கிடையாது.

ச. சுப்பிரமணியம்

ஓர் உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம். அந்தக் காலகட்டத்தில் சமாசமாஜக் கட்சியில் அங்கம் வகித்து, 1965 பொதுத்தேர்தலில் அக்கட்சி சார்பாக கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்ட இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, பின்னர் அக்கட்சியிலிருந்து விலகி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டார். அதன் பின்னர் முதல் தடவையாக அவரது முயற்சியால் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சி ஒரு மேதினக் கூட்டத்தை நடாத்தியது.

அந்தக் கூட்டம் நடந்த பின்னர் கிளிநொச்சி திரும்பிய ஆனந்தசங்கரி, 'எப்படி? ஜீ.ஜீ.பொன்னம்பலத்தையே சிவப்புக்

கொடியின் கீழ் மேதினக் கூட்டத்தில் பேச வைத்துவிட்டேன்' எனத் தனது கெட்டித்தனம் பற்றி சில இடதுசாரி நண்பர்களிடம் கூறினார் என்றால், தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தலைவருக்கும் மேதினத்துடன் அதுவரை இருந்து வந்த 'தொடர்பை' விளங்கிக் கொள்ளலாம்! (ஆனந்தசங்கரியின் அந்த 'கெட்டித்தனம்' குறித்து கருத்துச் சொன்ன வட்டக்கச்சியைச் சேர்ந்த கணேஸ் என்ற ஒரு சாதாரண விவசாயி, 'யானை சும்மா போகும் போதே கண்ணில் காணும் மரங்களையெல்லாம் முறித்துச் செல்வது வழமை. அப்படியான யானையை வாழை மரத்தில் கட்டி வைத்தது போன்ற கதைதான் பொன்னம்பலத்தை மேதினக் கூட்டத்தில் பேச வைத்த செயல்' என விமர்சனம் செய்தது வேறு கதை.)

இப்பொழுது கூட்டுச் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் மேதினம் கொண்டாடிய ஐ.தே.க - தமிழ் கூட்டமைப்பு வலதுசாரி பிற்போக்குக் கட்சிகள், 1965ல் தாம் ஆட்சியில் இருந்தபோது மேதினத்தைத் தடை செய்து சாதனை புரிந்தவர்கள் என்பது இன்றைய சந்ததியினர் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். 1965ல் ஐ.தே.க தலைமையில், தமிழ் காங்கிரஸ் - தமிழரசுக் கட்சிகள் உட்பட ஏழு பிற்போக்கு, இனவாதக் கட்சிகள் கொண்டு அமைந்த அரசே இந்த மேதினத் தடைக் கைங்கரியத்தை 1966 மேதினத்தின் போது அரங்கேற்றியது.

அப்பொழுது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வடக்கில் தீண்டாமைக்கு எதிரான போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்று வந்ததைக் காரணம் காட்டி, யாழ்ப்பாணத்தில் மேதின நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கினால் குழப்பம் உருவாகும் எனப் பொய்க்காரணம் கூறி, இரண்டு பிரதான தமிழ்க் கட்சிகளும் ஐ.தே.க அரசை வலியுறுத்தி அங்கு மேதின நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கச் செய்தன. ஆனாலும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி பொலிஸ் தடையையும் மீறி யாழ் நகரில் எழுச்சி மிகுந்த ஊர்வலம் ஒன்றை நடாத்தியதுடன், முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டத்தையும் நடாத்தி முடித்தது.

---

மார்க்ஸிஸ்டுகள் உண்மையான வாழ்க்கையைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; ஸ்தூலமான யதார்த்தங்களை பார்க்கவேண்டும்; நேற்றைய தத்துவத்தை பிடித்துக்கொண்டு விடாமல் தொங்கிக் கொணடிருக்கக்கூடாது - இந்த மறுக்க முடியாத உண்மையை உணர்வதுதான் முக்கியம்.

**- லெனின்**

---

பின்னர் அதே ஆட்சி, 1969ம் ஆண்டு மேதினமும் வெசாக் தினமும் ஒரே நாளில் வருகிறது, இலங்கை ஒரு பௌத்த நாடு என்றபடியால், வெசாக் தினத்துக்குத்தான் முன்னுரிமை, எனவே அன்றைய தினத்தில் மேதினத்தை நடாத்த அனுமதிக்க முடியாது எனக்கூறி, மேதின நிகழ்வுகளை நாடு முழுவதும் தடை செய்தது. இப்பொழுது எடுத்ததெற்கெல்லாம் 'சிங்கள பௌத்த தேசியவாதம்' என தமிழ் இனவாதம் பேசும் இந்தத் தமிழ் தேசியவாதத் தலைமைகள், அன்றைய தினம் ஐ.தே.க அரசின் பௌத்த மேலாதிக்க நடவடிக்கைக்கு ஒத்துப் போனதிற்குக் காரணம், இன, மொழி பற்றுதலுக்கு மேலாக வர்க்க ஒற்றுமையைக் கருதியதால் தான்.

ஆனாலும் அந்த ஆண்டும், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மேதின ஊர்வலத்தையும் கூட்டத்தையும் வெற்றிகரமாக நடாத்தியது. கொழும்பில் கட்சியின் கம்பஹா தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்க தலைமையில் கட்சி உறுப்பினர்களும், தொழிலாளர்களும் தடையை மீறி ஊர்வலம் சென்று பொலிசாரினால் கைதாகினர்.

யாழ்ப்பாணத்தில் மேதினத்தன்று காலையில் அங்குள்ள கட்சிக் காரியாலயத்தைச் சுற்றி வளைத்த பொலிசார், கட்சியின் வட பிரதேசச் செயலாளர் தோழர் வீ.ஏ.கந்தசாமியையும், கட்சியின் முக்கிய தோழரும் எழுத்தாளருமான நீர்வை பொன்னையன் அவர்களையும், அங்கு தற்செயலாக வந்திருந்த 'பூகன்ஸ்' தேநீர்கடை உரிமையாளர் தோழர் வடிவுநாதனையும் கைதுசெய்து, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்காது, கிளிநொச்சி கொண்டு சென்று அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர்.

இருந்தும், பொலிசாரின் தீவிர கண்காணிப்பையும் மீறி யாழ் நகரில் திரண்ட நூற்றுக்கணக்கான கட்சி ஆதரவாளர்கள், சரியாக மாலை 5.30 மணிக்கு தடையை மீறி ஊர்வலம் சென்றனர். செய்வதறியாது திகைத்து நின்ற பொலிசார் பின்னர் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு, முற்றவெளிக்கு அருகில் காங்கேசன்துறை வீதியில் தடுப்பு கேடயங்கள், துப்பாக்கிகள், குண்டாந்தடிகள், இரும்புச் சப்பாத்துகள் சகிதம் ஊர்வலத்தை எதிர்கொண்டு தடுத்து நிறுத்தினர்.

அந்த இடத்தில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் நடந்த மோதலில் இன்ஸ்பெக்டர் சகாயம் உட்பட சில பொலிசாரும், ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரும்

காயமடைந்தனர். தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம், எம்.ஏ.சி.இக்பால், கே.சுப்பையா, மரைக்காயர், அ.கௌரிகாந்தன் உட்பட அறுவரைப் பொலிசார் கைது செய்தனர். (அந்த நேரத்தில் எஸ்.சுந்தரலிங்கம் வட பிரதேச பொலிஸ் அத்தியட்சகராக இருந்தார். இவரே பிரசித்தி பெற்ற மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்ட காலத்திலும் அந்தப் பொறுப்பில் இருந்தவராவார்)

பின்னர் கந்தர்மடத்தில் இருந்த தனியார் காணியொன்றில் மேதினக் கூட்டம் நடந்தது. தனியார் காணிக்குள் பொலிசார் அத்துமீறி நுழைய முடியாது என்றபடியால், அவர்களால் கூட்டத்தைத் தடை செய்ய முடியவில்லை. ஆனால் கூட்டத்தில் பேசியவர்களைக் கைது செய்வதற்காக வெளியே காவல் நின்றனர். ஆனால் கூட்டத்தில் பேசியவர்களை மக்கள் பின்னால் இருந்த தமது வளவுகளுக்குள்ளால் அழைத்துச் சென்றதால், பொலிசாரின் அந்தத்திட்டமும் பயனற்றுப் போயிற்று.

மேதினக் கூட்டம் முடிந்த அடுத்த நாள் அதிகாலை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தோழர்களையும், பொலிசார் யாழ்ப்பாணம் கூட்டி வந்தனர். இருப்பினும் அவர்கள் நேராக யாழ். பொலிஸ் நிலையம் செல்லவில்லை. தமது ஜீப் வண்டியை யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்னால் நின்ற மரமொன்றின் நிழலில் மறைத்து நிறுத்திவிட்டு, ஒரு பொலிசாரை மட்டும் அனுப்பி, யாழ்.பொலிஸ் நிலையத்தை கம்யூனிஸ்ட்டுகள் தாக்கியிருக்கிறாாகளா என அறிந்த பின்னரே பொலிஸ் நிலையத்துக்கு அவர்களை கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த நேரத்தில், அக்கிராயன் - கோணாவில் பகுதியில் கட்சியின் கிளிநொச்சிக் கிளையினால் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த அரசியல் பயிற்சி முகாம் பற்றி பொலிசார் தீவிர விசாரணை நடாத்தியுள்ளனர். அந்த முகாமை அவர்கள் ஆயுதப் பயிற்சி முகாம் எனக் கருதியே இந்த தீவிர விசாரணையை மேற்கொண்டனர்.

பின்னர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவர்கள் யாவரும் விடுதலை செய்யப்பட்டாகள் என்றாலும், அன்றைய காலகட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச புரட்சிகர தினமான மேதினத்தில், முதலாளித்துவ ஐ.தே.கவும், அதன் வர்க்க – அரசியல் கூட்டாளிகளான தமிழ் காங்கிரஸ் - தமிழரசு கட்சிகளும் எவ்வாறு நடந்த கொண்டன என்பதற்கு, இந்த வரலாற்றுச் சம்பவங்கள் ஒரு உதாரணமாகும். அதே தமிழ் - சிங்கள பிற்போக்கு சக்திகள்தான், இன்றும் யாழ்ப்பாணத்தில் மீண்டுமொருமுறை தமது எதிர்ப்புரட்சி நாடகத்தை அரங்கேற்றியுள்ளன.

ஆனால் இம்முறை மேதினத்தை தடை விதித்தல்ல, மேதினத்தைக் கேளிக்கைப் பொருளாக்கிக் கொண்டாடியதன் மூலம், தமது எதிர்ப்புரட்சி நடவடிக்கையை அரங்கேற்றியுள்ளன. இருப்பினும் இந்த முறையும் இந்த எதிர்ப்புரட்சி சக்திகளின் சதித்திட்டங்கள் மக்களிடம் பெரிதாக எடுபடவில்லை. இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வைப் பொறுத்தவரை, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஈ..பி.டி.பி நடாத்திய மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலுமே, ஐ.தே.க – தமிழ் கூட்டமைப்பு மேதினக் கூட்டம் - ஊர்வலத்தை விட அதிகளவான மக்கள் பங்குபற்றியுள்ளனர். அதுமட்டுமின்றி, அங்கு புலிகள் தடை விதித்திருந்த காலத்தின் பின்னர் முதல் தடவையாக இடதுசாரிகள் நடாத்திய மேதின நிகழ்விலும் கூட குறிப்பிடத்தக்க அளவு மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

எனவே, தமிழ் மக்கள் மத்தியில் இனவாத அல்லது பிற்போக்கு சக்திகள் எவ்வளவுதான் நாசகார அரசியலைத் தொடர்ந்தும் தொடர்ந்தும் முன்னெடுக்க முயன்றாலும், மக்கள் அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றத் தயாரில்லை என்பதையே, அன்றைய புரட்சிகர மேதின பாரம்பரியம் மட்டுமின்றி. இவ்வருட யாழ்ப்பாண மேதின நிகழ்வுகளும் எடுத்துக்காட்டியுள்ளன. *

---

2ம் பக்கத்தொடர்ச்சி.....

ஊற்றினார் என்றால், 'இடதுசாரி' ஜனாதிபதி புண்ணுக்கு மேல் பவுடரைப் போடுவார். அவ்வளவு தான்!

பெயரில் மட்டும் சோசலிசம் இல்லாமல், நடைமுறையில் சோசலிசம் மலர வேண்டும் என்றால், மக்களின் கைகளுக்கு அதிகாரம் வந்துசேர வேண்டும். அப்பொழுதுதான் தனிநபர்களிடமும், பெரும் கோப்பரேட் நிறுவனங்களிடமும் குவிந்துள்ள பெரும் மூலதனம் முழுவதும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அதன் பலாபலன்கள் மக்களைச் சென்றடையும்.

**- நமது நிருபர்**

---

மக்கள் திரளினர்தான் உண்மையான வீரர்கள். நாமோ பல சமயங்களில் சிறுபிள்ளைத்தனமும் அறியாமையும் உடையவர்களாக இருக்கிறோம். இதைப் புரிந்து கொள்ளாமல் மிகமிக அடிப்படையான அறிவைக் கூடப் பெறுவது சாத்தியமே இல்லை.

- மாஓசேதுங்

# முஸ்லீம் காங்கிரசின் புதிய தொழிற்சங்கம் தொழிலாளர்களைக் கூறுபோடுமா?

– சாஹுல் ஹமீத்

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தனது கட்சியின் தலைமையில் 'ஜனநாயக பொது ஊழியர் சங்கம்' என்ற பெயரில் புதிய தொழிற்சங்கமொன்றை ஆரம்பித்துள்ளது. இதன் அங்குரார்ப்பண வைபவம் 2012 மார்ச் 28ம் திகதி நீதி அமைச்சில் நடைபெற்றது. அதன் போது புதிய சங்கத்தின் தலைவராக முஸ்லீம் காங்கிரசின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டார்.

இங்கு பேசிய ஹக்கீம், தமது கட்சியின் தலைவர் மர்ஹூம் அஸ்ரப் அவர்கள் தான் உயிருடன் இருந்த காலத்திலேயே இவ்வாறான தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்க எண்ணம் கொண்டிருந்தார் எனவும், அது தற்போதுதான் நிறைவேறுகிறது என்றும் சொன்னார். அத்துடன் தமது சங்கம் இன வேறுபாடுகளுக்கு அப்பால், சகல தொழிலாளர்களையும் இணைத்துச் செயற்படும் என்றும் குறிப்பிட்டார். முஸ்லீம் காங்கிரஸ் ஒரு தொழிற்சங்கத்தைப் புதிதாகத் தொடங்குவதற்கு சகல உரிமைகளும் உண்டென்ற போதிலும், இலங்கை இன்றுள்ள நிலையில் தொழிலாளர்கள் மத்தியில் மேலும் ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பிப்பது அவசியம்தானா என்ற கேள்வி எழுகின்றது.

1948ல் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே, பிரிட்டிஸ் காலனித்துவவாதிகளின் கடும் அடக்குமுறையையும் மீறி இடதுசாரிகளான சம சமாஜக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினருமே தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கங்களை அமைத்துப் பெரும் சிரமங்கள் மத்தியில் செயற்பட்டனர். அப்பொழுதெல்லாம் வேலைத்தலங்களில் வாக்கெடுப்பு நடாத்தி, அதில் வெற்றிபெறும் தொழிற்சங்கமே அங்கு இயங்க அனுமதிக்கப்பட்டது. பின்னர் 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்ததும், ஒரு தொழிற்தளத்தில் 7 பேர் இணைந்தால் ஒரு தொழிற்சங்கத்தை சட்டப்படி அமைத்து நடாத்தலாம் எனச் சட்டம் நிறைவேற்றினார்.

பண்டாரநாயக்க இச்சட்டத்தைக் கொண்டு வந்ததின் நோக்கம், ஒரு பக்கத்தில் முதலாளிகள் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதை இலகுவாக்குவதற்காகவும், மறுபக்கத்தில் இடதுசாரிகளின் ஏகபோகத்தைத் தகர்த்து, தமது சிறீலங்கா சுதந்திரக்கட்சி இலகுவாக தொழிற்சங்கங்களை அமைப்பதை இலக்காகவும் கொண்டிருந்தது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததின் பின்னர், தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்கங்கள் புற்றீசல் போல் பெருகியதுடன், போலி தொழிலாளர் தலைவர்களும் உருவாகி, தொழிலாளி வர்க்கத்தை கட்சி அடிப்படையிலும், இன, மொழி, மத அடிப்படையிலும் கூறுபோடும் நிலை உருவாகியது.

இந்தச் சட்டத்தின் விளைவாகப் பெரு முதலாளிகளின் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கூட தொழிங்சங்கங்களை ஆரம்பித்தது. அத்துடன் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர தினமான மேதினத்தை அது களியாட்ட விழாவாகவும் மாற்றியது. தமிழரசுக்கட்சி தொழிலாள வர்க்கத்தை இன அடிப்படையில் கூறு போடுவதற்காக, மொழி வழி தொழிற்சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்து சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டது. இத்தகைய நாசகாரச் செயல்களின் மூலம் இந்த முதலாளித்துவக் கட்சிகள் தொழிலாள வர்க்கத்தில் ஒரு பகுதியினரை இனவாத சிந்தனைக்குள் தள்ளிவிட்டனர். அதன் காரணமாகவே நாட்டில் நடைபெற்ற 30 வருட இனவாதப் போரில், அதற்கெதிராகத் தொழிலாள வர்க்கத்தால் செயற்பட முடியாமல் போனது.

இன்று யுத்தம் முடிவடைந்து, அனைத்து இன மக்களும் ஐக்கியமாகின்ற ஒரு சூழலில், குறிப்பாகத் தொழிலாளி வர்க்கம் தனது இன, மத, மொழி பேதங்களை மறந்து ஓரணியாகச் செயற்பட வேண்டிய ஒரு சூழலில், ஒரு இனத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சியான முஸ்லீம் காங்கிரஸ் புதிதாக ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கியமை, தொழிலாளி வர்க்கத்தை மேலும் இன அடிப்படையில் கூறுபோடவே வழிகோலும் எனப் பலரும் கருதுகின்றனர். ஹக்கீம் முன்னர் துறைமுக அமைச்சரான இருந்த காலத்தில், துறைமுகத்தில் வேலை செய்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை அணிதிரட்டும் வாய்ப்பு இருந்தும், அதைச் செய்யாமல் விட்டுவிட்டு, இப்பொழுது மட்டும் திடீரென தொழிற்சங்கம் அமைக்கப் புறப்பட்டதின் நோக்கம் என்னவெனவும் பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர். *

வர்க்கப்போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சியவாதிகள் ஆகிவிடமாட்டார்கள்... வர்க்கப் போராட்டத்தை ஏற்பதை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பது வரை விரித்து செல்பவனே மார்க்சியவாதியாவான். மார்க்சியவாதிக்கும் சாதாரண சிறு (அதேபோல பெரு) முதலாளிக்கும் இடையே உள்ள மிகவும் ஆழமான வேறுபாடாக இதுவே அமைகிறது. – **லெனின்**

# இனிவரும் உலகம் பற்றி பெரியார் கூறிய தீர்க்கதரிசனம்!

இன்றைய உலகமானது பழங்கால உலகம் என்பதிலிருந்து நாளுக்கு நாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது இனிச் சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும் - என்பனவாகிய விடயங்கள் பகுத்தறிவாளர்களுக்குத்தான் ஏதாவது தெரியக்கூடுமே தவிர, புராண இதிகாசப்பண்டிதர் என்பவர்களுக்கு - அதுவும் நம் கலை, காவியப் பண்டிதர்களுக்குத் தெரிவது சுலபமான காரியமல்ல.

பகுத்தறிவுவாதிகள் அந்தப்படி இல்லாமல், அனுபவத்தையும் தங்கள் கண்களில் தென்படும் காட்சிகளையும், வஸ்துகளின் குணங்களையும், அவற்றின் மாறுதல்களையும், இயற்கையின் வழிவழித் தன்மைகளையும், அவற்றால் கண்டுபிடிக்கப்பட்டு வரும் புதுமை அதிசயங்களையும், மனிதனுக்கு முன் காலத்தில் இருந்து வந்த அறிவாற்றலையும், சிந்தித்து இன்று உள்ள அறிவையும் ஆற்றலையும், இனி ஏற்படும் அறிவாற்றலையும் சாதனங்களையும் மற்றும் இவை போன்றவைகளையும் ஆராய்ச்சிக் கண்களோடு நடுநிலையில் இருந்து பார்ப்பவர்களாவார்கள்.

போக்கு வரவு - எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத் தந்திச் சாதனம் - ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ - ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் - எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால், ஓரிடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும்படியாக உணவுச்சத்துப் பொருள்கள் சுருக்கப்பட்டு, ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடக்கக்கூடிய உணவு ஏற்பட்டு விடும்.

பிள்ளைப்பேறுக்கு ஆண் - பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும் படியாக, பொலிகாளைகள் போல் தெரிந்தெடுத்த மணிபோன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்செக்ஸன் மூலம் பெண்கள் கருப்பைக்குள் செலுத்தி நல்ல குழந்தைகள் பிறக்கச் செய்யப்படும். ஆண், பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

**- இது காஞ்சிபுரத்திலிருந்து வெளியிடப்பட்ட 'திராவிட நாடு' பத்திரிகையில் 28.03.1934 அன்று ஈ.வே.ரா. பெரியார் எழுதியதாகும்.. வருங்கால உலகம் எப்படி எப்படியெல்லாம் மாற்றமடையும் என்பதை 78 ஆண்டுகளுக்க முன்பே பெரியார் தீர்க்கதரிசனத்துடன் பார்த்துள்ளார் என்பதை, அவரது வாசகங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.** *

# முல்லை மாவட்டத்துக்குப் படையெடுக்கும் மக்கள்!

இலங்கையில் 30 வருட உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் இயல்பு நிலைமை மிக வேகமாக முன்னேறி வருகின்றது. இதன் ஒரு அங்கமாக நாட்டின் எல்லாப் பகுதி மக்களும் ஏனைய பகுதிகளுக்கு எவ்வித பயமோ தயக்கமோ இன்றி விஜயம் மேற்கொள்ளுகின்றனர். இதில் புலம்பெயர் மக்களும் அடக்கம். புலிகளின் காலத்தில் இலங்கைக்கு வர அஞ்சிய புலம்பெயர் தமிழர்கள் பலர், இப்பொழுது பல்லாயிரக்கணக்கில் தமது தாய்நாட்டுக்கு வருகை தந்து மாதக்கணக்கில் தங்கியிருந்துவிட்டுச் செல்கின்றனர். சிலர் நிரந்தரமாகவே தாயகத்தில் வாழுவதற்கும் வந்துள்ளனர்.

போர் முடிவடைந்ததும் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள மக்கள் பெருமெடுப்பில் வடபகுதிக்குப் படையெடுத்து, யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டதுடன், அவர்கள் புனித பூமியாகக் கருதும் நயினாதீவுக்கும் யாத்திரை மேற்கொண்டனர். அதேபோல இப்பொழுது இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பெருமளவு படையெடுத்து வருகின்றனர்.

பெரும்தொகையான தென்னிலங்கை யாத்திரீகர்கள் முல்லை மாவட்டத்துக்கு வருவதினால், பாதுகாப்பு அமைச்சு அந்த மக்களுக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது. அதன்படி, அந்தப் பிரதேசத்துக்குச் செல்லும் பிற பிரதேச மக்கள் அந்தப் பகுதியின் கலாச்சார நியமங்களை மதித்து நடக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. அத்துடன் அங்குள்ள கோவில்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள், அங்கு நடைமுறையிலிருக்கும் கலாச்சார - சமய மரபுகளுடன் ஒத்துப்போகும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

முல்லை மாவட்டத்துக்குச் செல்லும் பயணிகள் புளியங்குளம் - நெடுங்கேணி - முல்லைத்தீவு வீதியையும், மாங்குளம் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு வீதியையும், பரந்தன் - புதக்குடியிருப்பு - முல்லைத்தீவு வீதியையும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வீதிகள் யாவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. தண்ணீருற்று கிராமத்திலிருந்து முல்லைத்தீவு வரையிலான 56 கிலோ மீற்றர் நீளமான வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் காப்பற் வீதியாக மாற்றப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருபவர்கள் அங்குள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக, முன்பதிவுகளை மேற்கொள்ளும்படி முல்லைத்தீவு இராணுவத் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதற்கு வசதியாக sfhqmltvisit@gmail.com என்ற தனது மின்னஞ்சல் முகவரியையும் அது அறிவித்துள்ளது. *

பொதுவுடைமைப் புரட்சி என்பது மரபுவழிப்பட்ட உடைமை உறவுகளுடன் ஏறபடுத்திக் கொள்ளும் மிகத் தீவிரமான முறிவாகும். எனவே அப்புரட்சியின் வளர்ச்சி மரபுவழிப்பட்ட கருத்துக்களுடன் மிகத் தீவிரமான முறிவை உட்படுத்துகிறது என்பதில் வியப்பில்லை.

**- பொதுவுடைமை அறிக்கை**

# அமெரிக்க வெள்ளைத் திமிர் வழங்கிய ஒரு தீர்ப்பு!


1857ஆம் ஆண்டு அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிப்பது சம்பந்தமான ஒரு பிரபல்யமான வழக்கு நடைபெற்றது. அன்றைய காலகட்டத்தில், அமெரிக்க முதலாளிகளால் ஆபிரிக்காவிலிருந்து மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்கிவரப்பட்ட இலட்சக்கணக்கான கறுப்பு இன மக்கள், அடிமை நிலையில் மிகவும் மோசமான வாழ்க்கை நிலைமைகளில், அமெரிக்கா எங்குமிருந்த பண்ணைகளில் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த நிலைமையை மாற்றக் கோரி, ஒரு கறுப்பின அடிமை அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தான். அவன் அந்த மனுவில், "அடிமை முறை இல்லாத ஒரு நாட்டில் நான் வாழ்ந்து வருகின்றேன். ஆகவே சட்டத்தைப் பொறுத்த வரையிலும் என்னுடைய அடிமை அந்தஸ்தை சட்டபூர்வமாகச் செல்லாது என அறிவிக்க வேண்டும்" எனக் கோரியிருந்தான்.

இந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்பளித்த அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரோஜர் புரூக்ஸ் டேனி, "ஒரு வெள்ளையர் மதித்து நடந்து கொள்ளத்தக்க எந்தவோர் உரிமையும் கறுப்பனுக்குக் கிடையாது" என வெள்ளைத் திமிருடன் கூறினார்!

அவப்பெயர் பெற்ற 'டிரட் ஸ்காட் கருத்துரை' என வர்ணிக்கப்படும் இந்தத் தீர்ப்பின் போது, தலைமை நீதிபதி டேனியும் மற்றும் பெரும்பான்மையான நீதிபதிகளும் பின்வருமாறு கூறியிருக்கின்றனர்:

"சுதந்திரப் பிரகடனமும், அரசியலமைப்புச் சட்டமும் வரையப்பட்ட போது, ஆபிரிக்க — அமெரிக்கர்கள் ஐந்தில் மூன்று பங்கு மனிதப் பண்பை மட்டுமே கொண்டவர்கள் என்றே கருதப்பட்டார்கள். "மக்களாகிய நாம்" என்று நாங்கள் கூறும்போது, நிச்சயமாக அது உங்களை (அடிமைகள்) குறிப்பதல்ல. ஆகவே, "மக்களாகிய எங்களுக்கு" உரிய உரிமைகளையும், சொத்துரிமைகளையும் உங்களுக்குத் தர முடியாது. உங்களுக்கோ, உங்கள் வாரிசுகளுக்கோ, உங்களுடைய சந்ததியினருக்கோ அரசியலமைப்புச் சட்டம் பொருந்தாது. என்றைக்கும் உங்கள் வாரிசுகள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முடியாது."



எவ்வளவு வெள்ளைத் திமிருடன் கூடிய தீர்ப்புப் பாருங்கள்! மனித குலப் பிறப்பின் கருவறை எனக் கருதப்படும் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புராதன நாகரீகம் உள்ள ஒரு மக்களைப் பார்த்து, சுமார் 500 ஆண்டு வரலாற்றை மட்டுமே கொண்ட ஒரு நாட்டின் நீதிபதிகள் - அதுவும் அந்நாட்டின் பூர்வ குடிகளான செவ்விந்திய இன மக்களை அழித்து உருவாக்கிய நாட்டின் வெள்ளை நீதிபதிகள் - கூறியிருக்கும் நிறவெறி பிடித்த தீர்ப்பு எப்படியென்று பாருங்கள்!!

ஆனால் இன்று வரலாறு மாறிவிட்டது. அமெரிக்காவில் இன்று கறுப்பினக் கலப்புக் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக இருக்கின்றார். இருப்பினும் நிறவெறி முற்றிலுமாக மறைந்து விடவில்லை. அது நீறுபூத்த நெருப்பாக அங்கு இன்னமும் கனன்று கொண்டுதான் இருக்கின்றது. அதுமட்டுமின்றி, அமெரிக்கப் பெரு முதலாளிகளின் ஈவிரக்கமற்ற சுரண்டலினாலும், ஒடுக்குமுறையினாலும் கறுப்பின மக்கள் மட்டுமின்றி, அங்குள்ள வெள்ளையின மக்களும் அல்லல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அதன் வெளிப்பாட்டைத்தான் 'வோல் ஸ்றீற்றை கைப்பற்றும் போராட்டங்கள்' சமீபத்தில் எடுத்துக் காட்டின. *

## 'வானவில்' பெற்றுக்கொள்ள....

'வானவில்' பல்லாயிரக்கணக்கானோருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இருந்தும் இன்னும் பலருக்கு அது கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது. அப்படியானவர்கள் தங்களதோ, தங்கள் நண்பர்களதோ மின்னஞ்சல் முகவரியை அனுப்பி வைத்தால், பிரதியை அனுப்பி வைப்போம். அத்துடன் வானவில் அச்சுப் பிரதியைத் தபாலில் பெற விரும்புவோர், அஞ்சல் செலவை ஏற்றுக்கொண்டால், பிரதிகள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். புலம்பெயர் நாடுகளில் வெளியாகும் தமிழ் ஊடகங்களில் 'வானவில்' முக்கியமானதொன்று என்றபடியால், அதன் வளர்ச்சியில் உங்கள் ஒவ்வொருவருக்கும் முக்கிய பங்குண்டு என்பதை நினைவூட்டுகின்றோம்.

அனைத்துவிதமான தொடர்புகளுக்கும் மின்னஞ்சல் முகவரி: sunvaanavil@gmail.com

# 2009 மே 18 இன அழிப்பின் தொடக்கமா? முடிவா?

- சேவந்கொடியோன் -



இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுற்ற மூன்றாவது ஆண்டை, மே 18ம் திகதி அரசாங்கம் படை அணிவகுப்புகளுடன் தலைநகர் கொழும்பில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. அதேபோல இல்லாவிடினும், புலம்பெயர் நாடுகளிலுள்ள புலிகளின் அமைப்புகளும் தமது இழப்பைத் தமிழ் மக்களின் இழப்பாக வர்ணித்து சில பல நிகழ்ச்சிகளை நடாத்தின. ஆனால் இம்முறை புலிகள் எதிர்பார்த்த அளவுக்கு தமிழ் மக்கள் அவர்களது நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. இதிலிருந்து புலிகள் ஏதாவது பாடங்கள் கற்றுக் கொண்டிருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

இந்தப் போர் வெற்றியை அரசாங்கம் நாட்டின் பொதுவான வெற்றியாகக் காண்பிப்பதை விட, ஒரு சாரார் இன்னொரு சாராரைத் தோற்கடித்த வெற்றி போல வருடாவருடம் கொண்டாடி வருவதிலோ அல்லது அதை இனிமேலும் தொடர்வதிலோ ஏதாவது பிரயோசனம் உண்டா என்ற கேள்விகளும் இருக்கத்தான் செய்கின்றன. அரசாங்கம் இந்தக் கொண்டாட்டங்களுக்கு அதீத கவனம் செலுத்துவதையும், அதிக பணம் செலவழிப்பதையும் விட்டுவிட்டு, செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன.

முக்கியமாக, போர் முடிந்தாலும், இந்தப் போர் ஆரம்பமாவதற்குக் காரணமான இனப்பிரச்சினை என்ற காரணி இன்னமும் அப்படியேதான் இருக்கின்றது. அந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி, தனது சர்வாதிகார அதிகாரத்துக்காக தனது சொந்த இன மக்களையே படுகொலை செய்த பாசிசப் புலிகளை அரசாங்கம் நிர்மூலம் செய்தது வரவேற்கப்பட வேண்டியதும், கொண்டாடப்பட வேண்டியதும்தான். ஆனால் அதையே தொடர்ந்து செய்து கொண்டிருப்பதால், மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. புலிகள் ஒழிக்கப்பட்டுள்ளார்களே தவிர, இனப்பிரச்சினை ஒழிக்கப்படவில்லை. இதை அரசு உணர்ந்து அதற்கு ஒரு பரிகாரம் காண முன்வர வேண்டும்.

அடுத்ததாக, இந்த யுத்தம் பாதித்த இன்னொரு விடயம், நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாகும். யுத்தத்தினால் ஏற்பட்ட

பொருளாதார நெருக்கடி தமிழ் மக்களை மட்டும் பாதிக்கவில்லை. அது இனவேறுபாடின்றி அனைத்து நாட்டு மக்களையும் பாதித்தது. இன்று யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்ட போதிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டபாடாக இல்லை. உணவுப் பொருட்களினதும், எரி பொருட்களினதும் விலைகள் மாதாமாதம் அதிகரித்த வண்ணமே உள்ளது. யுத்தம் முடிந்தும் அதைத் தீர்க்க அரசால் முடியாமல் இருப்பதற்குக் காரணம், ஏகாதிபத்தியப் பொருளாதாரச் சில்லுடன் இலங்கைப் பொருளாதாரம் பிணைக்கப்பட்டிருப்பதும், இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளின் தவறான பொருளாதாரக் கொள்கைகளுமாகும்.

எனவே இந்தப் போரின் வெற்றியின் பின்னர், அரசாங்கம் பொதுவாக நாட்டு மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ்மக்களுக்கும் என்னென்ன விடயங்களைச் செய்ய வேண்டும் என்பதை பாரதூரமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியதுதான் இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டிய விடயம். போர் வெற்றியைக் காட்டி ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியைத் தொடரலாம் என அரசாங்கம் மனப்பால் குடித்தால், அது கண்ணாடிக்குள் நிலவைப் பிடித்த கதையாக முடிந்துவிடும்.

மறுபக்கத்தில், போரின் இறுதிக்கட்ட நடவடிக்கையை அரசாங்கத்தின் திட்டமிட்ட தமிழினப் படுகொலை எனக் காட்ட புலிகள் பெரும் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு வருகின்றனர். அரசாங்கத்திலும் ஆயுதப்படைகளிலும் சிலர் தமிழின விரோதிகளாக இருப்பது உண்மைதான். இந்த யுத்தத்தை 1977ல் பதவிக்கு வந்தவுடன் ஆரம்பித்த ஜே.ஆர்.ஜெயவர்தர்தனவும் அவரது ஐக்கிய தேசியக்கட்சி அரசும் தமிழ் மக்கள் மேல் திட்டமிட்ட இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டதும் உண்மைதான். அதனால்தான் அதற்கெதிராகப் போராடுவதற்குப் பல தமிழ் இளைஞர் அமைப்புகள் ஆயுதபாணியானதும், அதற்குத் தமிழ் மக்கள் ஆதரவு கொடுத்த நிலைமையும் உருவானது.

ஆனால் ஐ.தே.கவின் 17 வருட கொடுங்கோல் ஆட்சி விரட்டப்பட்டு, 1994ல் சந்திரிகா தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி வந்ததும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவும் அவரது அரசு முன்வந்த போது, அவரது சமாதானக் கரங்களை எட்டி உதைத்தது புலிகள்தான். போர் வெறியிலும் அதிகார மமதையிலும் இருந்த புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரது உடன் பிறவா சகோதரர்களும் மக்களின் அழிவுகளைப் பற்றிச் சிந்திக்காது போரைத் தொடர்வதிலேயே ஆர்வமாக இருந்தனர். தங்களை இராணுவம் வெல்லுவதானால் குறைந்தது 1 இலட்சம் தமிழ் மக்களையாவது இராணுவம் கொல்ல வேண்டிவரும் என வீராப்புப் பேசினர்.

அவ்வளவு தூரம் அவர்கள் பொதுமக்களை போர்க்களத்தில் பலியிடுவதற்குத் தயாராக இருந்தனர். அவர்கள் சொன்னபடி அந்த நாளும் வந்தது. அவர்கள் சொன்னதன் அர்த்தம் அப்பொழுதுதான் மக்களுக்குப் புரிந்தது. அதாவது மக்களை அவர்கள் தமது பாதுகாப்புக் கேடயமாக, பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கப் போகிறார்கள் என்ற விடயம் அப்பொழுதுதான் எல்லோருக்கும் புரிய வந்தது. கால தாமதமாகப் புரிந்து கொண்டதால் புலிகளின் நயவஞ்சகத் திட்டத்திலிருந்து மக்களால் தப்ப முடியாமல் போய்விட்டது. அப்படியிருந்தும் தப்ப முயன்றவர்களைப் புலிகள் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொன்றனர். புலிகள் சொல்வது போல, ஒரு கதைக்கு இலங்கை இராணுவம் இனவாத அடிப்படையில் தமிழ் மக்களை போரின் இறுதி நாட்களில் கொன்றது என்றால், புலிகள் தமது சொந்த இன மக்களையே சுட்டுப்படுகொலை செய்ததை எந்த வாதத்தில் சேர்ப்பது? அதைத்தான் பாசிசம் என்று சொல்வதா?

இறுதிப் போரின் போது புலிகளும் சில சர்வதேச அமைப்புகளும் சொல்வது போல நாற்பதாயிரம் ஐம்பதினாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை என்றாலும், அண்ணளவாக இருபதினாயிரம் மக்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என மக்கள் மத்தியிலிருந்து கிடைக்கும் சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவம் இனவாத ரீதியில்தான் இறுதிக்கட்ட நேரத்தில் நடந்து கொண்டது என்றால், அதற்கு முன்னரே பல தமிழ் கிராமங்களைக் கொத்தணிக் குண்டுகளை வீசி பூண்டோடு அழித்திருக்கலாமே? அதை ஏன் செய்யவில்லை? (ஜே.ஆரின் ஆட்சி அவ்வாறு சில கிராமங்களை – கொக்கட்டிச்சோலை, ஒதியமலை போன்ற இடங்களில் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தது!)

புலிகளிடமிருந்த தப்பி ஓடிவந்த மூன்று இலட்சம் மக்களைப் பாதுகாத்து உணவும் உறையுளும் அளித்த இராணுவம், இருபதாயிரம் மக்களை மட்டும் இனவாதக் கண்கொண்டு அழித்தொழித்தது என்பதை நம்ப முடியுமா? உண்மை அதுவல்ல. புலிகள் பொதுமக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கவில்லையென்றால், அந்த மக்கள்கூடப் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள்.

வாழ்வா சாவா என்ற இறுதிக்கட்ட யுத்த நிலைமையில், ஒரு போர்முனையில் எந்தவொரு படையும் சாவகாசமாக உட்கார்ந்து விவாதித்துக்கக் கொண்டு இருக்காது என்பது, போரில் பெரும் புலிகளான புலிகளுக்குத் தெரியாமல் போனது விந்தையிலும் விந்தைதான்.

30 வருடமாகத் தாம் இழந்ததை ஈடுசெய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை, இலங்கை இராணுவம் மட்டுமின்றி அந்த இடத்தில் புலிகளின் இராணுவம் இருந்திருந்தாலும் அதையேதான் செய்திருக்கும். இந்த உண்மையைச் சொல்வதற்கு எந்தப் பாசாங்குத்தனமும் நமக்குத் தேவையில்லை.

உண்மையில் மக்களின் இழப்பு துயரமானதுதான். ஆனால் வரலாற்றில் ஏற்படும் சில எதிர்மறையான போக்குகளைச் சீர்செய்வதற்கு சில இழப்புகள் தவிர்க்க முடியாமல் நிகழ்ந்து வந்திருப்பதை வரலாறு முழுவதும் நாம் காணலாம். இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் நாஜிப்படைகளைத் தோற்கடித்து அழிப்பதற்கு சோவியத் மக்களும் இதர பல்வேறு நாட்டு மக்களும் இலட்சக் கணக்கில் தமது உயிர்களைத் தியாகம் செய்தார்கள். அதன் மூலம் உலகைக் கபளீகரம் செய்ய முனைந்த ஒரு பாசிச அரசை அறுதியும் இறுதியுமாக உலகிலிருந்து துடைத்தெறிந்தார்கள். அதுபோலத்தான் புரட்சிகள் அரங்கேறிய ஒவ்வொரு நாடுகளின் வரலாறும் இருக்கின்றது.

புலிகளே அரசுடனான இறுதி மோதலில் 1 இலட்சம் தமிழ் மக்களைத் 'தியாகம்' செய்ய இருந்த சூழலில், இந்தளவுடனாவது முடிந்தது பெரிய விடயம். அதேநேரத்தில் புலிகள் அழிந்ததின் மூலம் தமிழ் மக்களுக்கு என்றென்றைக்கும் நிம்மதியான ஒரு வாழ்வும் கிடைத்துள்ளது. புலிகள் அழிக்கப்படாமல் தப்பிப்போக விடப்பட்டிருந்தால், இந்த 3 வருட காலத்தில் யுத்தத்தாலும், புலிகளின் தனித் தாக்குதல்களாலும் எத்தனை ஆயிரம் மக்கள் அழிந்திருப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். அப்படிப் பார்க்கையில், இறுதி யுத்தத்தில் விரும்பாத நரபலியைக் கொடுத்தென்றாலும், தொடரப்போகும் நரபலியை நிறுத்தியது ஒப்பீட்டு வகையில் மேல் என்றுதான் எந்தப் பகுத்தறிவாளனும் ஏற்றுக்கொள்வான்.

எனவே இறுதி யுத்தம் என்பது புலிகளுக்கு எதிரானதே ஒழிய தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. புலிகள் அவர்களைப் பணயக் கைதிகளாக வைத்திருக்காவிட்டால், அவர்களது உயிர்களும்கூட பாதுகாக்கப்பட்டிருக்கும். எது எவ்வாறாயினும், இந்தப் போரின் முடிவின் போது தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட இழப்புகளுக்காக நாம் மனம் வருந்தி, அப்படியானவர்களுக்காக எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்கினாலும், போர் என்றென்றைக்குமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதையிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். அதாவது தவிர்க்க முடியாத ஒரு அழிவின் மூலம் இன்னொரு ஆக்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

'அழிவில்லாமல் ஆக்கம் இல்லை' என எமது முன்னோடி அனுபவ ஞானிகள் சொல்லிச் சென்றிருப்பது இதைத்தான் போலும். *

# மேதின தியாகிகளுக்கு அஞ்சலி!

*1886ல் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் 8 மணி நேர வேலை நேரம் உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தமொன்றில் குதித்தனர். வேலை நிறுத்தத்தை அடக்க முதலாளி வர்க்கம் பல்வேறு வழிவகைகளைக் கையாண்டது. ஆனால் தொழிலாளர்கள் அவற்றுக்கெல்லாம் அடங்க மறுத்தனர். தமது கோரிக்கைளை வலியுறுத்தி சுமார் 25,000 பேர் கலந்து கொண்ட ஊர்வலம் ஒன்றில் அவர்கள் அணிவகுத்துச் சென்றனர். அந்த ஊர்வலம் மீது பொலிசார் முதலாளிகள் சார்பாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், ஏராளமான தொழிலாளர்கள் மரணித்தனர்.*

*வேலை நிறுத்தத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் என்ற குற்றச்சாட்டில் பல தொழிலாளர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. அவர்களில் ஆல்பர்ட் பார்சன்ஸ், ஆகஸ்த் ஸ்பைஸ், அடொல்ஃப் பிஸர் ஆகியோா 1887ல் தூக்கிலிடப்பட்டு வீர மரணம் அடைந்தனர்.*

*1889ல் பாரீசில் கூடிய சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகள், மே முதல் நாளை சிவப்புக் கொடியை ஏந்தி சர்வதேசத் தொழிலாளர் தினமாக அனைத்துலகத் தொழிலாளி வர்க்கம் நினைகூர வேண்டும் எனப் பிரகடனம் செய்தது. அன்று முதல் உலகப் பாட்டாளி வர்க்கம் மே முதல் நாளை தனது உரிமைப் போராட்டத்தைப் பிரகடனம் செய்த நாளாக, தான் சிந்திய இரத்தத்தில் தோய்ந்த செங்கொடியை உயரத் தூக்கி எழுச்சியுடன் நினைவுகூர்ந்து வருகிறது. தொழிலாளரை உறிஞ்சிக் கொழுத்த முதலாளி வர்க்கமும் தனது பல்வேறு வர்ணக் கொடிகளுடன் தொழிலாளர்களை ஏமாற்ற மே நாளைக் கேளிக்கைகளுடன் 'கொண்டாடி' வருகிறது.*

*மே நாளைக் நினைவுகூர்கின்ற இவ்வேளையில், சிக்காக்கோவில் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக முதல் கணையைத் தொடுத்து, தமது உயிரைப் பரித்தியாகம் செய்த முதல் போராளிகளுக்கும், அவர்களது அடிச்சுவட்டை அடி பிசகாது பின்தொடர்ந்து அளப்பரிய தியாகங்கள் புரிந்த உலகெங்கிலுமுள்ள பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகளுக்கும், 'வானவில்' தனது சிரம் தாழ்த்தி புரட்சிகர அஞ்சலியைச் செலுத்துகிறது.*

**ஆசிரியர் குழு - வானவில்**

முன்பக்கத்தொடர்ச்சி...

பயன் ஏதுமின்றி, புலியின் வாலைப் பிடித்துவிட்ட இரண்டும் கெட்டான் நிலையில், வெறும் கையோடு வெற்று டப்பாவை வைத்து தட்ட வேண்டி இருக்கிறது.

இன்று தமிழகத்தை எடுத்துக்கொண்டால், சினிமா கழைக்கூத்தாடி சீமான் முதல் காங்கிரஸ் கட்சியின் சில பிரிவுகள் வரை இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை வைத்தே தமது அரசியல் நொண்டிக் குதிரையை ஓட்டி வருகின்றனர். இதில் பழமும் தின்று கொட்டையும் போட்டு, பின்னர் அந்தக் கொட்டையையும் முளைக்க வைத்து, அதிலும் பழம் பிடுங்கிச் சாப்பிட்டுக்கொண்டு இருப்பவர், பல தடவை தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.கருணாநிதி ஆவார்.

கடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சிபீடத்திலிருந்து அதளபாதாளத்திற்கு (மூன்றாவது இடத்துக்கு) தள்ளப்பட்ட கருணாநிதி, தனது அரசியல் வைரியான தற்போதைய தமிழக முதலமைச்சரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவியுமான ஜெ.ஜெயலலிதாவை நெருக்கடியில் தள்ளுவதற்காகவும், தனது தி.மு.கழகத்தைக் குடும்ப உறுப்பினர்களிடையே முதுசமாகப் பங்கிட்டளிப்பதை எதிர்க்கும் சாதாரண கழகத் தொண்டனை திசைதிருப்பி ஏமாற்றுவதற்காகவும், இத்துப்போன தனது கடந்தகால கொள்கைகளுக்கு வர்ணம் பூசி விற்பதற்காக தெருவோரம் கடை விரிக்க ஆரம்பித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் இளைஞர்களின் பல்வேறு போட்டி ஆயுதப் போராட்ட இயக்கங்களும் செயற்பட்ட காலத்தில், கருணாநிதி தான் முன்னின்று உருவாக்கி, பின்னர் புலிகள் அதை நிராகரித்து எம்.ஜீ.ஆருடன் கூட்டு வைத்ததால், பரணில் மூட்டைகட்டிப் போட்டிருந்த ‘தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு’ (Tamil Eelam Supporters Organisation) என்ற பெயர்ப்பலகையை சமீபத்தில் தூசுதட்டி தனது கட்சியின் தலைமையகமான ‘அண்ணா அறிவாலயத்தில்’ காட்சிக்கு வைத்துள்ளார்.

புலிகளையும் தமிழ் ஈழக் கோரிக்கையையும் தீவிரமாக எதிர்த்து வந்த ஜெயலலிதா, கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது இலங்கை அரசையும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் கடுமையாக வசைபாடியதால், அதுதான் அவரது தேர்தல் வெற்றிக்கு வழிகோலியது எனத் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்ட கருணாநிதி, ஜெயலலிதாவை முந்துவதாக நினைத்துக்கொண்டு இப்பொழுது இலங்கைத் தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை கருத்துக்கணிப்பு நடாத்தி தமிழீழ தனிநாடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என புலம்ப ஆரம்பித்துள்ளார். அந்த நோக்கத்துக்கு வலுச் சேர்ப்பதற்காகவே தனது தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பையும் புதுப்பித்துள்ளார்.

அதுமாத்திரமின்றி, இதுவரை காலமும் மிகக் கவனமாக அவர் பாதுகாத்து வைத்திருந்த மிகப்பெரிய ‘இரகசியம்’ ஒன்றையும் தனது பாசாங்கு தமழீழ ஆதரவுக்கு வலுச்சேர்ப்பதற்காக வெளியிட்டுள்ளார். அதாவது புலிகளால் மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உயிருடன் இருந்த காலத்தில் தன்னுடன் ஒருமுறை கதைக்கும் போது, பிரபாகரன் தலைமையில் இலங்கையில் தமிழீழம் அமைத்துக் கொடுப்பதுதான் தனது இலட்சியம் எனக் குறிப்பிட்டதாக கருணாநிதி தனது கற்பனைக் குதிரையை அவிழ்த்து விட்டுள்ளார். எமது மக்களின் ஐதீகத்தின்படி இறந்தவர்களின் ஆவிகள் பூமியில் உலவிக் கொண்டிருந்தால், கருணாநிதியின் இந்த அபாண்டக் கதையைக் கேட்டு ராஜீவ் காந்தி தன்னைப் படுகொலை செய்த புலிகளை மன்னித்துவிட்டு, அந்த இடத்தில் கருணாநிதியைத்தான் நிச்சயமாக வைப்பார்!

கருணாநிதி வயது மூப்புக் காரணமாகத்தான் ‘அறளைபெயர்ந்து’ இவ்வாறெல்லாம் புலம்புகிறார் என கூறுபவர்களும் உண்டு. ஆனால் கருணாநிதி என்ற ‘பல்கலைக்கழகத்தை’ப் படித்தவர்களுக்குத்தான் அதன் உண்மை பொய் தெரியும். அவர் இன்னும் குறைந்தது 10 வருடங்களுக்காவது நல்ல நிதான புத்தியுடனும், குள்ளத்தனத்துடனும் அரசியல் காய்களை நகர்த்தக் கூடியவர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை எத்தனையோ எரியும் பிரச்சினைகள் இருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, மின்சாரப் பற்றாக்குறை, தீண்டாமைக் கொடுமை, அயல் மாநிலங்களுடன் நதிநீர்ப்பங்கீடு பற்றிய பிரச்சினை, மீனவர்களுக்கு போதிய வருவாயில்லாமை, பன்னாட்டுக் கம்பனிகளின் படையெடுப்பு, கல்வி – சுகாதாரப் பிரச்சினை, பொதுத்துறைகளில் நிலவும் ஊழல் – அதிகாரத் துஸ்பிரயோகம் என எண்ணிலடங்காத பிரச்சினைகள் அங்கு உடனடித் தீர்வுக்காகக் காத்துக் கிடக்கின்றன. அவற்றுக்கெல்லாம் பல தடவைகள் முதலமைச்சர் பொறுப்பு வகித்த கருணாநிதி தீர்வுகாண முயற்சிக்கவில்லை. இப்பொழுது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் ஜெயலலிதாவாலும் தீர்வுகாண முடியவில்லை. தமிழ்நாட்டின் முதன்மை ஆசனத்தில் அமர்ந்த அல்லது அமர்ந்திருக்கும் அவர்கள் இருவருமே கூட எத்தனையோ ஊழல் வழக்குகளில் சிக்கிக் கிடக்கிறார்கள்.

தமிழக அரசியல்வாதிகளைப் பற்றி, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த சமயத்தில், பிரபலமான தமிழக பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான ஞானி எழுதியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அவர் 'கல்கி' வார இதழில் தான் வாராவாரம் எழுதி வரும் 'ஓ பக்கங்கள்' பகுதியில் இவ்வாறு கூறுகிறார்:

"தில்லியில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பும் தமிழக அரசியல்வாதிகள் நம்பத் தகுந்தவர்களே அல்ல. போர் நடந்து கொண்டிருந்த போது இதே ஒற்றுமையை, இதே ஆவேசத்தை அவர்கள் தில்லியில் காட்டவில்லை. காட்டியிருந்தால் போரை நிறுத்தி, பேச்சுவார்த்தைக்கு நகர்த்த பாடுபட்டிருந்தால், ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளும், பொருட்சேதமும் தவிர்க்கப்பட்டிருக்க முடியும். அப்போதும் முதலமைச்சராக இருந்த கருணாநிதி தம் பதவியை ராஜினாமா செய்யப் போவதாக மிரட்டியிருந்தாலே தில்லி கேட்டிருக்கும். இப்போது பல்லில்லாத தண்ணிப் பாம்பாக அவர் இருக்கும் நிலையில் அவர் மிரட்டல்களுக்கு அர்த்தமே இல்லை".

1967 முதல் தமிழகத்தை ஆட்சி செய்து வரும் இரு கழகங்களினதும் அதிகாரத்தின் மீதான தமிழகத்தின் சமூக வாழ்வை எடுத்துக் கொண்டால், சினிமாகாரர்கள்தான் அங்கு முதற்தரப் பிரஜைகளாக வலம் வருகிறார்கள். கட்சிக்காரர்களும் பேட்டை ரவுடிகளுமே தமிழகத்தின் நகரங்களையும் கிராமங்களையும் ஆளுகிறார்கள். கொள்ளை, கூலிக்குக் கொலை செய்வது, விபச்சாரம், கள்ளச்சாராய விற்பனை, இயற்கை வளங்களைச் சூறையாடுதல், போலி டாக்டர்கள் – பட்டதாரிகளை உருவாக்குவது என தமிழக சமூகம் மொத்தத்திலும் நாறிக் கிடக்கிறது.

அப்படியிருக்க, ஒப்பீட்டு வகையில் தமிழக மக்களைவிட ஓரளவு சிறப்பான வாழ்வை அனுபவித்து வரும் இழங்கைத் தமிழர்களின் வாழ்க்கையுடன் தமிழக அரசியல்வாதிகள் விளையாடி வருவது கடைகெட்ட அயோக்கியத்தனமாகும். தயவு செய்து நீங்கள் எங்களுக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்துகொண்டு, எங்கள் தலையில் மிளகாய் அரைக்காதீர்கள். எங்கள் விடயங்களை எங்களாலேயே கவனிக்க முடியும். எப்படி 30 வருடங்களாக போரின் வலியை எங்களுக்காக நீங்கள் சுமக்காமல் நாங்களே சுமந்து நின்றோமோ, அதேபோல போர் முடிவுற்ற பின்னரான சமாதானச் சூழலில் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி, ஒரு செழிப்பான வாழ்வை உருவாக்கி வாழவும் எங்களுக்குத் தெரியும்.

தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சியினரான நீங்கள் இருவரும் (கருணாநிதி – ஜெயலலிதா) போருக்குப் பிந்திய எமது வாழ்வை நேரடியாகப் பார்க்க இலங்கை வந்த அனைத்துக் கட்சி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் பங்குபற்றாது விசமத்தனமாக புறக்கணித்துவிட்டீர்கள். அப்படிப் புறக்கணித்துவிட்டு, இலங்கைத் தமிழரின் தற்போதைய நிலை பற்றி இல்லாததும் பொல்லாததும் பேசி வருகிறீர்கள். உங்களுக்கு இங்குள்ள நிலை பற்றி 'உண்மையில்' தெரியாவிட்டால், அந்தத் தூதுக்குழுவுக்குத் தலைமைதாங்கி வந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவியும், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவியுமான சுஸ்மா சுவராஜிடம் கேட்டாவது தெரிந்து கொள்ளுங்கள். அதை விடுத்து எங்கள் நிலை பற்றி வம்பு தும்பு பேசாதீர்கள்.

நீங்கள் எங்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்லிக்கொண்டு, மீண்டும் மீண்டும் செய்வதெல்லாம் திரும்பவும் எங்களைப் போருக்குள் தள்ள எடுக்கும் முயற்சியே தவிர வேறொன்றும் இல்லை. எனவே தயவுசெய்து எம்மைவிட்டு எட்ட விலகி நின்று, எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள். உங்களுக்கு அரிப்பெடுக்கும் நேரங்களில் சொறிந்து கொள்வதற்கு ஏதாவது தேவைப்பட்டால், அதற்கு தயவுசெய்து 'தமிழீழத்தை' கையில் எடுக்காதீர்கள். நீங்கள் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னரே அரசியல் ஆதாயம் கருதி பரணில் மூட்டை கட்டிப் போட்ட, உங்கள் 'இலட்சியக் கொள்கையான' திராவிட நாடு அமைக்கும் திட்டத்தைக் கையில் எடுங்கள்! *

# முதுபெரும் தோழருக்கு வாழ்த்து!

**வ**டமராட்சி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கல்லுவத்தில் திருமணம் செய்து வாழ்ந்தவரும், தற்போது கனடாவில் வசித்து வருபவரும், 60 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் இடதுசாரி அரசியல் – தொழிற்சங்க இயக்கத்தில் அர்ப்பணிப்புணர்வுடன் செயல்பட்டவரும், 'வானவில்' இதழின் உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் பெரும் பங்கு வகித்தவருமான, முதுபெரும் தோழர் சி.தருமராசன் 2012 மே 28ம் திகதி தமது 80வது அகவையைப் பூர்த்தி செய்கிறார்.

தோழர் தருமராசன் நல்ல ஆரோக்கியத்துடனும் சிறப்புடனும் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து, தனது சமூகத்துக்கும் குடும்பத்துக்கும் அளப்பரிய சேவைகளைப் புரிய வேண்டுமென 'வானவில்' மனதார வாழ்த்துகிறது.

**–'வானவில்' ஆசிரிய குழு**

## ஆயுத இறக்குமதியில் சீனாவை விஞ்சியது இந்தியா!

ஆயுத இறக்குமதியில் இதுவரை காலமும் தனக்கு முன்னால் இருந்த சீனாவை இந்தியா பின்னுக்குத் தள்ளியுள்ளது. 2007 - 2011 வரையான 5 ஆண்டுகளில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 38 சத விகிதத்தால் அதிகரித்து, ஆசியாவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவின் ஆயுத இறக்குமதி உலக ஆயுத வியாபாரத்தில் 10 வீதமாகும். இந்தத் தகவல்களை ஸ்டொக்ஹோம் சர்வதேச சமாதான ஆய்வு மையம் என்ற சுவீடனைச் சேர்ந்த பாதுகாப்பு சிந்தனை குழாம் வெளியிட்டுள்ளது.

இதேவேளையில், இந்தப் பிராந்தியத்திலுள்ள சீனாவும், பாகிஸ்தானும் தலா 5 வீதம் ஆயுத கொள்வனவையே உலக வர்த்தகத்தில் கொண்டுள்ளன. சுவிடிஸ் நிறுவனத்தின் தகவல்களின்படி, 2006 - 2007 காலகட்டத்தில் ஆயுத இறக்குமதியில் உலகின் முதலாவது இடத்தில் இருந்த சீனா, இப்பொழுது நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதற்கொரு காரணம், சீனா இப்பொழுது தனது சொந்த ஆயுத உற்பத்தியை அதிகரித்திருப்பதுதான். சீனா இப்பொழுது உலக ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்கா, ரஸ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகியவற்றுக்கு அடுத்ததாக ஆறாவது ஸ்தானத்தில் உள்ளது.

சீனாவிடமிருந்து அதிகமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் பாகிஸ்தான் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இவற்றுள் சீனாவிடமிருந்து பெற்ற 50 JF-17s சண்டை விமானங்களும் அடக்கம். இதுதவிர பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து 30 F-16s சண்டை விமானங்களையும் வாங்கியுள்ளது.

இந்தியா அடுத்த 15 வருடங்களில் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஆயுதங்களுக்கும், அது சம்பந்தமான அமைப்பு முறைகளுக்கும் செலவிட உள்ளது. இந்தியா அண்மையில் சில ரகமான போர் விமானங்களை வாங்கியுள்ளதுடன், 126 சண்டை விமானங்களை வாங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. அது ரஸ்யாவிடமிருந்து 120 Su-30MKs மற்றும் 16 MIG-29Ks விமானங்களையும், பிரித்தானியாவிடமிருந்து 20 ஜக்குவார் விமானங்களையும் வாங்கியுள்ளது. இதுதவிர அண்மைக் காலங்களில் இந்தியா விநியோக விமானங்கள், நீர்மூழ்கிகள், கடற்படைக் கலங்கள், டாங்கிகள், சிறிய ரக ஆயுதங்கள், பீரங்கிகள் என்பனவற்றையும் அதிகளவில் கொள்வனவு செய்துள்ளது.

இதுதவிர இந்தியா அண்மைக்காலங்களில் விநியோக விமானங்கள், நீர்மூழ்கிகள், கடற்படைக்கலங்கள், டாங்கிகள், சிறியரக ஆயுதங்கள், பீரங்கிகள் என்பனவற்றையும் அதிகளவில் வாங்கிக் குவித்துள்ளது.

இந்தியா தனது சொந்தப் பாதுகாப்புக்காக மட்டுமின்றி, சீனாவைச் சுற்றி வளைக்கும் மேற்கத்தைய சக்திகளின் வலைப்பின்னலிலும் இணைக்கப்பட்டுள்ளதால், ஆயுதங்களை வாங்கிக் குவிக்க ஊக்குவிக்கப்படுகிறது என, சில நோக்கர்கள் கருதுகிறார்கள்.

## ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நீதிமன்ற நீதிபதிகள் தேர்தலில் இந்தியா தோல்வி!

2012 ஏப்ரல் கடைசி வாரத்தில் ஐ.நா சபையின் நீதிக்கான அனைத்துலக நீதிமன்ற நீதிபதிகள் தெரிவுக்காக நடைபெற்ற தேர்தலில் இந்தியா நிறுத்தியிருந்த வேட்பாளர் தோல்வியைத் தழுவியுள்ளார்! அதேவேளை பிலிப்பைன்ஸ் நிறுத்தியிருந்த வேட்பாளர் வெற்றியீட்டினார்.

இந்த நீதிமன்ற அமைப்பு 1946ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதில் 15 நீதிபதிகள் அங்கம் வகிக்கின்றனர். இந்த நீதிமன்றத்தில் உறுப்பு நாடுகளால் சமர்ப்பிக்கப்படும் சட்டப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு வந்தது. அத்துடன் ஐ.நா.வின் பல்வேறு அமைப்புகளுக்கான சட்ட ஆலோசனைகளையும் இந்த நீதிமன்ற அமைப்பு வழங்கி வந்தது.

சமீபத்தில் இந்த நீதிமன்ற அமைப்பில் ஏற்பட்ட வெற்றிடமொன்றுக்கு தேர்தல் நடாத்தப்பட்டது. இந்தியாவின் சார்பில் அதன் உச்ச நீதிமன்ற நீதிபதி தல்வீர் பண்டாரி நிறுத்தப்பட்டார். பிலிப்பைன்ஸ் நாட்டின் சார்பாக அந்நாட்டின் நீதிபதி புளொரன்ரினோ பொலிசியானோ (84) போட்டியிட்டார். வாக்கெடுப்பின் முடிவில் பிலிப்பைன்ஸ் நீதிபதி வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தலில் இலங்கை பிலிப்பைன்ஸுக்கு சாதகமாகவே வாக்களித்ததாக நம்பப்படுகிறது. இரகசிய வாக்கெடுப்பு என்றபடியினால், அதைத் தெளிவுபட உறுதிப்படுத்த முடியவில்லை. சமீபத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்திருந்தது. ஆனால் பிலிப்பைன்ஸ் அதற்கெதிராக இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தது. இந்தப் பின்னணியிலேயே இலங்கையின் வாக்களிப்பு சம்பந்தமான ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. *